காலை முரசு


பக்கங்கள் - 23

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 15 வியாழக்கிழமை 29.01.2026 | அதிர்வு 182

## சிறீதரனைச் சந்தித்த புதிய கனேடியத் தூதர்



(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)



# வரிசை யுகத்தை முடித்த பெருந்தலைவரே ரணில்!

## ஆதரவாக முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் களத்தில்

"பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்ட பெருந்தலைவரே ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு எங்கள் ஆதரவு தொடர்ந்து இருக்கும்."

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இலண்டன் பயணம் குறித்த வழக்கு விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று 04▶

# தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து கிவுல் ஓயா திட்டத்தை முறியடிப்போம்!

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசியல் பீடம் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நடைபெறவுள்ள போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கலந்துகொள்ள வேண்டும் என்று அந்தக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மெய்நிகர் மூலமாகக் கூடியது. இதில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கட்சியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். 03▶







'தனக்குத் தானே சூனியம் வைத்தல்' அல்லது 'சொந்தச் செலவில் சூனியம் வைத்தல்' என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

அத்தகைய உணர்வை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அரச சொத்துத் துஷ்பிரயோக வழக்கில் எதிராளியாக நின்ற சமயம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

தமது மனைவியின் பட்டமளிப்பு விழா தொடர்பான தனிப்பட்ட லண்டன் விஜயத்துக்கு சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவை அரச செலவினமாக செலவிட்டமை மூலம் அரச நிதி துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு அவரின் மீது சுமத்தப்பட்டிருப்பது தெரிந்த விடயம்தான்.

இந்த வழக்கில் பிணையில் விடப்பட்டிருக்கும் அவர் வழக்குத் தவணைக்காக நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் 05▶



### டித்வா சூறாவளி பாதிப்புகளை மதிப்பிட வருகை தந்துள்ள

# சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுரவுடன் நேற்று சந்திப்பு

## அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்குப் பாராட்டு

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த 22 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த இந்தப் பிரதிநிதிகள் குழு, நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களை நேரில் பார்வையிட்டதுடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தனர்.

இலங்கைப் பொருளாதாரம் சீரடைந்து வரும் நிலையில் ஏற்பட்ட இந்தப் பேரிடர் குறித்து தமது வருத்தத்தைத் தெரிவித்த பிரதிநிதிகள் குழு, சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், உட்கட்டமைப்புகளைச் சீரமைக்கவும் அரசு எடுத்த விரைவான நடவடிக்கைகளைப் பாராட்டினர்.

அனர்த்தத்தின்போது அரசு செயற்பட்ட விதம், தம்முடன் உரையாடிய பெரும்பாலான மக்களால் பாராட்டப்பட்டதாக இங்கு பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியதுடன், இது அரசு ஈட்டிய முக்கியமான வெற்றியாகும் எனவும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன், கடந்த ஆண்டில் அரசு பேணிய உயர் நிதி ஒழுக்கம் இந்தச் சவாலை எதிர்கொள்வதில் பிரதான காரணி என்று சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், திறைசேரியில் மேலதிக நிதியைப் பேணியதாலே அதற்காக அரசால் 500 பில்லியன் ரூபா மேலதிக நிதி ஒதுக்கீட்டைச் சமர்ப்பிக்க முடிந்துள்ளது எனவும், இது மிகவும் பாராட்டுக்குரிய விடயம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடுமையான பேரிடர் நிலைமையிலும் கூட தற்போது உரிய பொருளாதார திசையில் பயணிப்பதாகச் சுட்டிக்காட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கையுடன் முன்னெடுக்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் எந்த மாற்றமும் மேற்கொள்ளாமல், அதன் 6 ஆவது தவணையை வழங்குவது தொடர்பான பேச்சுகள் எதிர்வரும் மார்ச் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தப் பேரிடரால் வறுமையிலுள்ள கிராமப்புற மக்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டனர் எனவும், அவர்களின் வாழ்வாதாரத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் வாழ்வாதாரம் பெரிதும் வீழ்ச்சியடைந்தது என்றும் இங்கு சுட்டிக்காட்டியதுடன், கிராமிய மக்களின் அன்றாட வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்காக 500 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகள் எவ்வகையிலும் முறையான நிதி முகாமைத்துவத்திலிருந்து விலகி, பொறுப்பற்ற ஒரு பொறிமுறையொன்றை முன்னெடுப்பதைக் குறிக்காது என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



புள்ளிவிவரங்கள் மூலம் காட்டப்படும் பொருளாதார வெற்றிகள் உண்மையாகவே சாதாரண மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கமாகும் என்றும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் கடந்த கால பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட நிலைமைகளால் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசின் எதிர்காலத் திட்டங்கள் அனைத்தும் அந்த திசையிலேயே திட்டமிடப்பட்டுள்ளன என்றும், அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளாமல், அதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கை அரசின் சார்பில் தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் கிருஷ்ணா சீனிவாசன், சஞ்சய பாந்த் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.











# சிறீதரனைச் சந்தித்த புதிய கனேடியத் தூதர்

## தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிவு

கனடாவின் இலங்கைக்கான புதிய தூதுவர் இஸபெல்லா மார்ட்டின், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழர் தாயகப் பகுதியின் நிகழ்கால அரசியல் நிலவரங்கள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் அரசின் நிலைப்பாடுகள், திட்டமிட்ட தமிழர் நில அபகரிப்புக்கள், கிவுல் ஓயா திட்டம் போன்றவற்றின் ஊடாக தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற விடயங்கள் கனடாவின் புதிய தூதுவருக்குச் சிறீதரன் எம்.பியால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.



புதிய தூதுவராக வருகை தந்திருந்த இஸபெல்லா மார்ட்டின் மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக மேலதிக விடயங்களையும் ஆர்வமாகக் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது போரின் பின்னர் தமிழர் பகுதிகளில் அடாத்தாக முளைத்துள்ள புதிய விகாரைகள், அரசியல் கைதிகள் தொடர்பான சில விடயங்களை ஆவணங்களுடன் புதிய தூதுவருக்குச் சிறீதரன் எம்.பி. தெளிவுபடுத்தியிருந்தார்.

சந்திப்பின்போது வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஒரு நினைவுச்சின்னமும் தூதுவர் இஸபெல்லா மார்ட்டினுக்குச் சிறீதரன் எம்.பியால் வழங்கிவைக்கப்பட்டது.

---

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாது,

“இலங்கை அரசு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்திருப்பதால் மாகாண சபைத் தேர்தல் பல வருடங்கள் தள்ளிப்போகலாம் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன், தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கான அழுத்தங்களை ஏனைய கட்சிகளுடன் இணைந்து உருவாக்க வேண்டும் எனவும், மாகாண சபைத் தேர்தலின் அவசியத்தை இராஜதந்திர சமூகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஏற்கனவே இந்த விடயங்கள் தொடர்பாக இந்தியா, நெதர்லாந்து, மற்றும் கனடா தூதுவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டமை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் அரசு கொண்டுவர யோசிக்கும் புதிய அரசியல் யாப்பு தொடர்பாகவும், அந்த யாப்பில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாகவும், அதில் அடங்க வேண்டிய விடயங்கள் குறித்தும் சகல தமிழ்க் கட்சிகளுடனும் கருத்தொற்றுமைகள் ஏற்படுத்தப்பட்டு ஒருமித்த ஒரு தீர்வுத் திட்டத்தை அரசிடம் கையளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பல்வேறுபட்ட ஜனாதிபதிகளால் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டு பல்வேறு வரைவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்து, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வரைவை அனைத்துக் கட்சிகளும் இணைந்து உருவாக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாடு மிகவும் வங்குரோத்தான சூழ்நிலையில் இருக்கின்றபோதும் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப்பெருக்கு அதனால் ஏற்பட்ட பல்லாயிரம் கோடி பெறுமதியான நட்டங்கள் உயிரிழப்புகள், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்கள் எனப் பல்லாயிரம் கோடி இருக்கின்ற வேளையில், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய கிவுல் ஓயா என்ற புதிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை உருவாக்கி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களுக்கு மேலதிகமாக இன்னமும் சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிக்கும் நோக்கில் அமுல்படுத்த எத்தனிக்கும் இத்திட்டத்தை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைப்பதுடன், இதற்கு அரசு செலவு செய்ய உத்தேசித்துள்ள 23 ஆயிரத்து 500 கோடி ரூபாவை எப்படிப் புரட்டப் போகின்றார்கள் என்பதை அரசு இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நடைபெறவுள்ள போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியும் கலந்துகொள்ள வேண்டும் என் றும் தீர்மானிக்கப்பட்டது.”
– என்றுள்ளது.





# கிளிநொச்சி மக்களின் வேதனையை அறிவேன்

## பணம் எல்லோரிடமும் இருக்கலாம்; தாயுள்ளம் சிலரிடமே என்று சிங்கப்பூர் துரை குடும்பத்தைப் பாராட்டிய ஆளுநர்

"போரின் இறுதிக் காலத்தில் நான் கிளிநொச்சி மாவட்ட செயலராகக் கடமையாற்றியவன் என்ற வகையில், இப்பகுதி மக்கள் அனுபவித்த வேதனைகளை நான் நன்கறிவேன். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும் என்பதே எமது நோக்கம். பணம் படைத்த எல்லோருக்கும் உதவுவதற்கு மனம் வருவதில்லை. ஆனால், சிங்கப்பூரைச் சேர்ந்த துரை குடும்பத்தினருக்கு அந்தத் தாயுள்ளம் வந்திருக்கின்றது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சிங்கப்பூரைச் சேர்ந்த திரு.திருமதி ரி.ரி.துரை குடும்பத்தினர் மற்றும் செல்வி சரசீஜா ராமன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரத்தின் ஏற்பாட்டில், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது மண்ணையும் மக்களையும் நினைத்து சிங்கப்பூரிலிருந்து உதவும் இவர்களது நல்ல மனதுக்கு இறைவன் இன்னும் அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பான். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் நான் அன்பாகக் கேட்பது ஒன்றே ஒன்றுதான். உங்களுக்கு உதவி செய்யும் இந்தப் பரோபகாரிகளுக்கு நீங்கள் செய்யக்கூடிய ஒரேயொரு கைமாறு, இந்த உதவியைச் சரியாகப் பயன்படுத்தி, சமூகத்தில் நீங்கள் முன்னேறி, உங்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைவது மாத்திரமேயாகும்.

இத்திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயற்படுத்திய ஜெயசேகரத்துக்கு நன்றிகள். அவர் எதை ஆரம்பித்தாலும் அதனை முழுமையாக நிறைவேற்றாமல் ஓயமாட்டார்.

கிளிநொச்சியில் மிகச் சிறப்பாகச் செயற்படக்கூடிய ஒரு மாவட்ட செயலாளர் இருக்கின்றார் என்ற அடிப்படையில், இத்திட்டத்தின் முதல் கட்டத்துக்கு அவர் கிளிநொச்சியைத் தெரிவு செய்தமைக்கு வாழ்த்துக்கள்." – என்றார்.

வடக்கு மாகாணத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 1000 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் இத்திட்டத்தின் முதல் கட்டமாக, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 181 குடும்பங்களுக்கு இன்று உதவிகள் வழங்கப்பட்டன.

இதற்காக ஒரு கோடியே 46 இலட்சத்து 24 ஆயிரத்து 400 ரூபா செலவிடப்பட்டுள்ளது. அடுத்தகட்ட உதவிகள் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சாள்ஸ் விஜயரட்ணம் ஜினோத், திட்ட ஏற்பாட்டாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான இ.ஜெயசேகரம், மாவட்ட செயலகப் பதவியினர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.





## வரிசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையானார். அவருக்கு ஆதரவு தெரிவித்து எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நீதிமன்ற வளாகத்துக்கு வந்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், கபீர் ஹாசீம், ஹர்ஷ டி சில்வா உள்ளிட்டோரும், ராஜித சேனாரத்ன, மஹிந்த அமரவீர உட்பட முன்னாள் அமைச்சர்களும், முன்னாள் எம்.பிக்களும் வருகை தந்திருந்தனர்.

இதன்போதே மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டில் வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர் ரணில். நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டபோது அவருடன் இருந்தோம். தற்போதும் நிற்கின்றோம்."

– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, "நீதிமன்றத்தை நாம் மதிக்கின்றோம். நீதிமன்றம் ஊடாக நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது."

– என்று மேலும் சிலர் நம்பிக்கை வெளியிட்டனர்.

# உரிய நேரத்தில் பிரதமருக்கு எதிரான பிரேரணை வரும்!

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது என்கின்றது எதிரணி

"சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் உரிய நேரத்தில் வரும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அனைத்து எதிரணிகளுடனும் கலந்துரையாடப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய உரிமை மீறல், பாரபட்சம் உட்பட சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டே பிரேரணை முன்வைப்பது குறித்து கலந்துரையாடப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசின் தேவைக்கேற்ப பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கு தாம் தயாரில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையானார். அச்சமயத்தில் அந்த வழக்கில் இரண்டாவது எதிரியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ செயலாளராக அச்சமயத்தில் பணியாற்றிய சமன் எக்கநாயக்க நீதிமன்றில் முன்னிலையானார். அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் பணித்துள்ளது.

இவர்களுக்கு எதிரான வழக்கு மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளை கொண்ட விசேட 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றில் விசாரிக்கப்படும் (நீதாய விசாரணை) என நேற்று மன்றில் வைத்து சட்டமா அதிபர் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய விசேட 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தை அதிக அதிகாரத்துடன் இயக்குவதற்கான விசேட சட்டத் திருத்தம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது நல்லாட்சி அரசில் 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

2015 வரை அதிகாரத்தில் இருந்த ராஜபக்ஷக்களின் அரசுகள் மேற்கொண்ட நிதி துஷ்பிரயோகங்கள் குறித்து விரைந்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக மைத்திரி - ரணில் இணைந்து முன்னெடுத்த நல்லாட்சி அரசில் 2018 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நீதித்துறை திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இதன் மூலம் கடுமையான - மோசமான - நிதி, பொருளாதார ஊழல் மற்றும் தொடர்புடைய குற்றங்களை (லஞ்சம் மற்றும் பண மோசடி குற்றங்கள் உட்பட) விரைவாக விசாரித்து முடிவுறுத்த மூன்று நீதிபதிகளை கொண்ட சிறப்பு மேல் நீதிமன்ற அமர்வுகளை நிரந்தரமாக நிறுவ வழி செய்யப்பட்டது.

அந்தச் சட்டத் திருத்தத்தின் கீழ் ராஜபக்ஷ அரசுகளின் பிரதானிகள் எவரையும் நல்லாட்சி அரசு முறையாகக் கையாள நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு முன்னரே மஹிந்த ராஜபக்ஷவை அரவணைத்து, அவரைப் பிரதமராக்கி, அவரது காலில் விழும் போக்கை நாடிவிட்டார் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன.

ஆக, அப்போது மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசினால் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம் இப்போது ரணில் விக்கிரமசிங்கவை விரைந்து விசாரித்து, அவரது விடயத்தில் ஒரு முடிவை குறுகிய காலத்தில் எட்டுவதற்கு பயன்படுத்தப்படப் போகின்றது.

இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்காக மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதாய விசாரணை ('ட்ரயல் அட் பார்') ஒன்றை நியமிக்க சட்டமா அதிபர் கோரினால் அத்தகைய மூன்று நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்ற ஆயம் ஒன்றை பிரதம நீதியரசர் நியமிப்பார்.

அத்தகைய ஆயம் வழக்குகளை ஒத்திவைக்காமல் தினசரி தொடர்ந்து விசாரித்து, குறுகிய காலத்தில் முடிவை எட்டும். இத்தகைய வழக்குகளைப் பொறுப்பெடுக்கும் சட்டத்தரணிகள் தமக்கு வசதி இல்லை என்று கூறி வழக்குத் தவணையை ஒத்திவைக்கக் கேட்க முடியாது. அப்படி ஒத்திவைக்கும் ஒழுங்குகள் உள்ள சட்டத்தரணிகள் இத்தகைய வழக்குகளைப் பொறுப்பேற்கக் கூடாது என்பதும் ஏற்பாட்டில் ஒன்று.

ஆக, ரணில் விக்கிரமசிங்க அப்போது பிரதமராக முன்னின்று கொண்டுவந்த சட்டத்தின் கீழ் இப்போது அவரே விசாரிக்கப்படப் போகின்றார்.

இதைத்தான் சொந்தச் செலவில் தனக்குத்தானே சூனியம் வைத்தது போன்ற உணர்வைத் தரும் விடயம் என ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

இத்தகைய 'ட்ரயல் அட் பார்' விசாரணையின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியாது. ஏனெனில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகக் கூடியது மூன்று நீதியரசர்களைக் கொண்டே அமரும். 3 நீதிபதிகளை கொண்ட மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மூன்று நீதியரசர்களைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விசாரிப்பதோ, மீளாய்வு செய்வதோ பொருத்தமற்றது என்பதனால் அந்த வாய்ப்பு இல்லாமல் ஆக்கப்படுகின்றது.

ஆக, 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றம் (3 நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்றம்) வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிரான மேன்முறையீடுகள் நேரடியாக உயர்நீதிமன்றத்தில் ஐந்து நீதியரசர்களுக்குக் குறையாத ஆயத்தினால் விசாரிக்கப்பட முடியும்.

ஆகவே இப்போது ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ளப் போகும் மேல் நீதிமன்ற விசாரணை தொடர்பில் அவருக்கு மேன்முறையீடு செய்ய உயர் நீதிமன்றம் மட்டுமே மிஞ்சி இருக்கும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவருக்கு மேன்முறையீடு செய்ய வாய்ப்புக் கிடைக்காது.

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்கு, மிருசுவில் படுகொலை வழக்கு, வித்தியா படுகொலை வழக்குப் போன்றவை இத்தகைய 'ட்ரயல் அட் பார்' முறையிலேயே விசாரிக்கப்பட்டன. அதே போல அவற்றின் மேன்முறையீடுகளும் ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றம் முன்பே வந்தன. கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்கு, மிருசுவில் படுகொலை வழக்கு ஆகிய இரண்டிலும் 'ட்ரயல் அட் பார்' மன்று வழங்கிய தீர்ப்பு உயர்நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது. வித்தியா படுகொலை வழக்குத் தீர்ப்புக்கு எதிரான மேன் முறையீட்டின் மீது ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கில் அரசுத் தரப்பு குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்த பின்னர்தான் இந்த வழக்கு நின்று நிலைத்துத் தாக்கு பிடிக்குமா என்பது குறித்து ஒரு கருத்தியல் நிலைப்பாட்டுக்கு வர முடியும்.



# ரணில் - சஜித் இணைவு உறுதி! அநுர அரசுக்கு அரசியல் அச்சம்!!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவது உறுதியாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இந்த இணைவானது அநுர அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்சி ஆதரவாளர்கள், தொண்டர்களின் கோரிக்கைக்கமையவே இணைந்து செயற்பட இரு தரப்பினரும் இணக்கத்துக்கு வந்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் எமது பலம் தெரியவரும்." – என்றார்.

இரு தரப்பு இணைவு தொடர்பில் நீண்ட காலமாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்தாலும், இணைவுக்குரிய கால எல்லை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# ஜனவரியில் சுற்றுலா அலை!

## 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வருகை




ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இலங்கைக்கு 2 இலட்சத்து 23 ஆயிரத்து 645 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனவரி 15 ஆம் திகதி மாத்திரம் 10 ஆயிரத்து 483 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

ஜனவரி 1 முதல் 25 வரை இந்தியாவில் இருந்து 41 ஆயிரத்து 603 பேரும், பிரிட்டனில் இருந்து 23 ஆயிரத்து 329 பேரும், ரஷ்யாவில் இருந்து 22 ஆயிரத்து 876 பேரும் இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளனர்.

இலங்கையின்பொருளாதாரத்துக்குச் சுற்றுலாத்துறை பெரும் பங்களிப்பு வழங்கி வருகின்றது.

கடந்த வருடம் 23 இலட்சத்து 62 ஆயிரத்து 521 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கை, கால்கள் கட்டப்பட்டு

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

கை, கால்கள் கட்டப்பட்டு தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அனுராதபுரத்தில் இராஜாங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா அல்லது உயிர் மாய்ப்பா என்பது தொடர்பில் இராஜாங்கனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# வயிற்றில் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாய் வைத்தியசாலையில்!

**(எஸ்.நிதர்ஷன்)**

தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயத்துடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். சாவகச்சேரி, தம்பு தோட்டத்தில் அமைந்துள்ள 523 ஆவது இராணுவப் படைப் பிரிவு முகாமில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 6 மணியளவில் மேற்படி இராணுவச் சிப்பாய் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய எச்.எம்.டபிள்யூ.பீ. பண்டார என்ற சிப்பாய் படுகாய மடைந்தவராவார்.

வயிற்றுப் பகுதியில் படுகாயம் அடைந்த இராணுவச் சிப்பாய் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் அறியப்படாத நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

---

# மொனராகலை – சியம்பலாண்டுவ விபத்தில் அரச நிர்வாக அதிகாரி ஒருவர் உயிரிழப்பு!

மொனராகலை – சியம்பலாண்டுவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்த எத்திமலை பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி, டிப்பர் லொறி மோதி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த அவர் மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

உயிரிழந்தவர் 39 வயதான தமயந்தி குமாரியாவார்.

மொனராகலையில் இருந்து சியம்பலாண்டுவ நோக்கி தனது உறவினருடன்



ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தபோது, சியம்பலாண்டுவ திசையில் இருந்து வந்த லொறி அவரது மோட்டார் சைக்கிளில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சந்தேக நபர் சியம்பலாண்டுவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புரியாத யதார்த்தம்

நீதிமன்ற விசாரணையில் இருக்கின்ற விடயங்கள் பற்றி விமர்சனம் செய்வதும் கருத்தாக்கம் வெளியிடுவதும் ஒரு வகையில் சட்ட மீறலாகவும், நீதிமன்ற அவமதிப்பாகவும், தவறாகவும் கொள்ளத்தக்கவைதான். ஆயினும் அத்தகைய சில விடயங்களைக் குறிப்பிடாமல் இருக்கவும் முடியாது உள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் காற்று மாசுபாட்டைக் குறைக்க மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையுடன் இணைந்து யாழ்ப்பாண மாநகர சபை ஏன் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாட்டைக் குறைக்க உத்தரவுகளைப் பிறப்பிக்கக்கோரி, அந்தப் பகுதியைச் சேர்ந்த டாக்டர் உமாசுகி நடராஜா என்பவர் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரித்தபோது, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

அரச நிறுவனங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் மூலம் இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று சுட்டிக்காட்டிய நீதியரசர், வழக்குகள் மூலம் இதுபோன்ற விடயங்களை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அது முற்றிலும் உண்மை.

மேற்படி மனு விசாரிக்கப்பட்ட போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரவீந்திரநாத் தாபரே, திறந்தவெளியில் குப்பைகளை எரிப்பதால் அந்தப் பகுதியில் காற்று மாசுபாடு கடுமையாக இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார். மேலும், தென்னிந்தியாவிலிருந்து வரும் கழிவுகள் காரணமாக யாழ்ப்பாணப் பகுதி கடுமையான காற்று மாசுபாட்டை சந்தித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்திற் கொண்ட நீதியரசர்கள், யாழ்ப்பாணப் பகுதியில் காற்று மாசுபாட்டைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபைக்கு உத்தரவிட்டனர்.

ஆனாலும் இதில் ஒரு விடயம் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பூகோள ரீதியான நிலைமை புரியாமல் நீதிமன்றம் யாழ்ப்பாண மாநகர சபையை மட்டும் நோண்டும் விதத்தில் தவறாக வழி நடத்தப்படுகின்றதா என்று ஒரு சந்தேகம் எழுகின்றது.

மொத்த யாழ்ப்பாண குடாநாடு ஏறத்தாழ 1,230 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. அதில் ஆக 20.2 சதுர கிலோமீட்டர் பிரதேசம் தான் யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டது. குடாநாட்டின் அறுபது மடங்கில் ஒரு சிறிய பிரிவு தான் யாழ் மாநகர சபைப் பிரதேசம். அந்தப் பிரதேசத்தில் மாத்திரம் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை யாழ் மாநகர சபை மாத்திரம் எடுத்து மாநகர சபைப் பிரதேசமாவது காற்று மாசுபாட்டில் இருந்து தப்ப முடியுமா என்றால் சாதாரண பாமரனும் அதற்குப் பதில் அளிப்பான்.

அருகில் இருக்கின்ற தென்னிந்திய மாநிலத்தில் தொடங்கி, முழு யாழ்குடா நாட்டையும், அதை அண்டிய வன்னி நிலப்பரப்பையும் கருத்தில் கொண்டு திருத்தம் செய்ய வேண்டிய வேலைக்கு யாழ் மாநகர சபையை மாத்திரம் நோண்டுவது வேடிக்கையாகத் தெரிகிறது. யாராவது இதனை நீதிமன்றத்துக்கு எடுத்துரைத்தால் நல்லதுதான்.



# திருமலைக் கடற்கரையில் புத்தர் சிலை வைத்தமை; பத்துப் பேருக்கும் விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்கரை சட்டவிரோத கட்டுமானம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பிக்குகள் உட்பட 10 பேருக்கும் எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரினால் 8 குற்றங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகையும் நேற்றுத் தாக்கல் செய்யப்படடுள்ளது.

திருகோணமலை டச்பே கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத கட்டுமானம் மற்றும் சர்ச்சைக்குரிய புத்தர்சிலை தொடர்பான வழக்கு நேற்றைய தினம் புதன்கிழமை திருகோணமலை நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே நீதிவான் அந்தப் பத்துப் பேருக்கும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார்.

எதிரிகள் ஒவ்வொருவருக்கும் 8 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகை பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகளைத் தாங்கள் நிராகரிக்கின்றனர் எனவும், ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான குற்றச்சாட்டுகள் போடப்பட்டுள்ளன எனவும் எதிராளிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். கடந்த தவணையில் இடம்பெற்ற வழக்கின்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியால் குறிப்பிடப்பட்ட சில சொற்கள் திட்டமிட்டு அறிக்கையில் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இதனை செய்துள்ளனர் எனவும் நீதிமன்றப் பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் தங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் எனவும் குற்றம் சாட்டியிருந்தனர்.

முதலாம், இரண்டாம் எதிராளிகளுக்குப் பிணை வழங்குமாறும் அவர்கள் கோரினர். அதற்கு பொலிஸ் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அத்துடன் கடந்த வழக்கில் இடம்பெற்ற அனைத்து உரையாடல்களும் ஒலி வடிவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன எனவும், எல்லாவற்றையும் அறிக்கையிட முடியாது எனவும், கொழும்பு மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கிற்கு சமர்ப்பிப்பதற்கு அவற்றை வழங்க முடியும் எனவும் நீதிவான் தெரிவித்தார். இந்த வழக்கில் 15 பேருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் ஏனையவர்கள் முன்னிலையாகாமல் வழக்கில் பிணை மற்றும் ஏனைய இணக்கப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாது என நீதிவான் தெரிவித்தார்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றால் இந்த வழக்கைக் கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்து, அதற்கான தடைக்கட்டளையை வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றில் எதிராளிகளினால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதி மன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், அதன் பின்னர் இந்த வழக்கைக் கொண்டு செல்வதற்காக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிக்கு இந்த வழக்கு திகதியிடப்பட்டது.

நேற்றைய தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது உதய கம்மன்பில உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாம் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகியிருந்தது.

திருகோணமலை டச்பே கடற்கரைக்கு அண்மையில் உள்ள ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதி ராஜ விகாரைக்கு உரியது என கூறப்படுகின்ற காணியில் கடற்கரையில் இருந்து சுமார் 11 மீற்றரில் சட்டவிரோதக் கட்டுமானம் கட்டப்பட்டதாகத் தெரிவித்தும், அமைதியைச் சீர் குலைக்கும் விதமாக அப்பகுதியில் புத்தர் சிலையை வைத்ததாகத் தெரிவித்தும், அதனுடன் சம்பந்தப்பட்ட 15 நபர்களுக்கு எதிராக திருகோணமலை துறைமுக பொலிஸாரினால் 17.11.2025 அன்று திருகோணமலை நீதுவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதன் பின்னர் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 10 பேர் கடந்த 14.01.2026 அன்று நீதிமன்றில் முன்னிலையான நிலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.










# மதக் குழப்பங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார்!

## திருகோணமலையில் உதய கம்மன்பில்ல காட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

நாட்டில் மதரீதியான குழப்ப நிலையை ஏற்படுத்த கூடிய நடவடிக்கைகளில் பொலிஸார் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் நீர்கொழும்பு பகுதியில் வைத்து கத்தோலிக்க மதகுரு ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார். தற்போது தாக்குதலில் ஈடுபட்ட 6 பொலிஸார் விசாரணைக் குட்படுத்தப்பட்டு விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். திருகோணமலையில் சென்ற நவம்பர் மாதம் பொலிஸாரால் பௌத்த தேரர்கள் தாக்கப்பட்டனர். ஆனால் அது பற்றி இன்று வரை எந்த விசாரணையும் இல்லை,எந்த நடவடிக்கையும் இல்லை என்று நேற்று திருகோணமலையில் வைத்து முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

திருகோணமலை டச்பே கடற்கரையில் சட்டவிரோத கட்டுமானம் ஒன்றை அமைத்து அதில் புத்தர் சிலையை வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 4 பௌத்த பிக்குகள் மற்றும் 6 பொது மக்கள் தொடர்பான வழக்கு நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அத்தருணம் எதிராளிகள் தரப்பில் சட்டத்தரணிகள் குழாமில் ஒருவராக உதய கம்மன்பில முன்னிலையாகினார். இதன் பின்னர் நீதிமன்றத்திற்கு வெளியில் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கும் போதே மேற்படி கருத்தை அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில. –

“திருகோணமலையில் வைத்து பொலிஸார், பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியமையை முழு நாடும் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் பிக்குமார் தம்மீது தாக்குதல் நடத்தினர் எனக் கூறி பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். பிக்குகள் தாக்கப்பட்டமை குறித்து எதுவும் கூறப்படவில்லை.

“விகாரைப்பகுதிக்குள் அத்துமீறி வந்தவர்கள் பொலிஸார். அங்கிருந்து புத்தர் சிலையை அகற்றிச் சென்றவர்கள் பொலிஸார். புத்தர் சிலைக்கு மேலாக விரிக்கப்பட்டிருந்த குடையை அடித்து உடைத்தவர்கள் பொலிஸார். ஆனால் குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது பிக்குமார் பொலிஸாரைத் தாக்கினர், அது குற்றம் என்று.

“இவ்வாறு நீதிக்கும், சட்டத்திற்கும் முரணான வகையில் தற்போது பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இதனால் குற்றம் சாட்டப்பட்ட எதிராளிகள் இக்குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. தாம் சுற்றவாளிகள் என்று மன்றிற்கு தெரிவித்துள்ளனர்.

“பொலிஸாரால் பிக்குமார் தாக்கப்பட்டனர். ஆனால் இன்று வரை அதுபற்றி விசாரணை எதுவும் இல்லை என்று இன்று நாம் மன்றிற்கு கூறினோம். இதனை அடுத்து பிக்குமார் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நீதிபதி பொலிஸாரை அறிவுறுத்தி உள்ளார்.

“சாட்சிகள் மற்றும் சந்தேகநபர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் 14ஆம் பிரிவின் 3ஆம் உப பிரிவை மீறும் பாரிய குற்றம் ஒன்றை பொலிஸார் புரிந்துள்ளனர். இந்த வழக்கின் எதிராளிகளிடம் சென்று. எதிராளிகளால் தமக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கை மீளப்பெற வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் 8 மாதங்களோ அல்லது அதற்கும் அதிக காலமோ விளக்கமறியலில் இருக்க வேண்டி வரும் எனக் கூறி பாரிய அழுத்தம் தரும் பயமுறுத்தலை விடுத்துள்ளனர். இவ்வாறு அழுத்தம் கொடுத்வர்கள் துறைமுக பொலிஸாரும், நிலாவெளி பொலிஸாரும். இவ்வாறு எதிராளிகள் தரப்பை அச்சுறுத்தியுள்ள பொலிஸாருக்கு எதிராக மன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாம் இன்று மன்றைக் கோரியுள்ளோம்.

“வெள்ளையர்கள் ஆட்சியில் கூட அவர்கள் பௌத்த விகாரைகளுக்குரிய உயர்வான மரியாதையை வழங்கினர். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் விகாரைப்பகுதியில் புத்தர் சிலையை வைத்தமையை குற்றம் என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.1948 இல் நாடு சுதந்திரம் அடைந்த போது ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில், விகாரை ஒன்றை அமைக்க அரசாங்கத்திடம் அனுமதி பெறத்தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய அரசாங்கம் அவற்றைக் கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை.” – என்றும் கூறினார்.



# சம்மாந்துறையில் முன்பள்ளி மாணவர்களுக்கான 'புன்னகைப் பூங்கா' வாய் சுகாதாரக் கண்காட்சி

(நூருல் ஹுதா உமர்)

பாடசாலை மற்றும் முன்பள்ளி மாணவர்களிடையே வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'புன்னகைப் பூங்கா' வாய் சுகாதாரம் தொடர்பான கண்காட்சி நேற்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌஷாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயனுள்ள வகையில் பல்வேறு விழிப்புணர்வு கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வாய்ப்புற்று நோய் மற்றும் முரசு நோய்கள், பற்சூத்தை மற்றும் முன்பிள்ளைப் பருவ பற்சூத்தை, சீரற்ற பல் வரிசை மற்றும் பல் உடைவுத் தடுப்பு முறைகள், வாய் ஆரோக்கியத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இடையிலான தொடர்பு போன்ற விடயங்கள் குறித்து சுகாதாரத் துறையினரால் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பிராந்திய வாய் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.ஹபீப் முகம்மட், பிராந்திய தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், சம்மாந்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.ஜலால்டீன், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் ஏ.ஆர்.எம்.உவைஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

சம்மாந்துறை கோட்டக்கல்வி அதிகாரி எம்.ரீ.ஜனுபர், பிரதேச சபை செயலாளர் யூ.எல்.அப்துல் மஜீட், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர் உள்ளிட்ட சுகாதாரத் திணைக்கள உத்தியோத்தர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.


















# சாயி பாபா அற்புதங்கள் கூறும் 'அனந்தா' கொழும்பில் ஞாயிறன்று திரையிடப்பட்டது

ஸ்ரீசத்ய சாயி பகவானின் ஜனன தின நூற்றாண்டை முன்னிட்டு, புட்டபர்த்தி பிரசாந்தி நிலைய அறங்காவலர் சபையின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஆன்மீக திரைப்படம் 'அனந்தா' திரையிடப்படும் நிகழ்வு கடத்த ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பு புதுச் செட்டித் தெரு சாயி நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

சாயி சமூகசேவை ஒருங்கிணைப்பாளர்களானஎஸ்.ரவீந்திரன்,ஆர்.அசோக் குமார் ஆகியோரின் அனுசரணையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், சாயி வணக்கஸ்தல பிதாமகர் சிவா செல்வரட்னம் மற்றும் சத்ய சாயி பாபா (ஸ்ரீலங்கா) அறங்காவலர் சபையினரும் பங்கேற்றனர்.

(படப்பிடிப்பு:– எஸ்.எம். சுரேந்திரன்).



















# அரச அலுவலர்களில் நம்பிக்கையில்லாததமையால்தான் பிரஜா சக்தியைக் கொண்டு வருகின்றதாம் அரசாங்கம்!

## அத்தரப்பினரின் கருத்தால் களேபரமான பருத்தித்துறைப் பிரதேச சபை

(மரியசீலன் திலைக்ஸ்)

அரச உத்தியோகத்தர்கள் மீது நம்பிக்கையில்லாத காரணத்தினால் தான் பிரஜா சக்தியை கொண்டு வந்தோமென பருத்தித்துறைப் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்தால் சபையில் களேபரம் ஏற்பட்டது

சம்பவம் குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:-

பருத்தித்துறை பிரதேச சபையின் இந்த வருடத்திற்கான முதல் அமர்வு நேற்றுக் காலை 9:30 மணியளவில் தவிசாளர் யுகதீஸ் தலைமையில் பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது முதலாவது விடயமாக அரசாங்கத்தின் பிரஜா சக்தித் திட்டத்துக்கு எதிரான பிரேரணை தவிசாளரால் சபையில் கொண்டுவரப்பட்டது

இதற்கு எதிர்வினை ஆற்றிய தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் மேலும் கருத்து வெளியிடும்போது,

அரச ஊழியர்கள் அரசாங்கத்திற்கு உண்மையாக இல்லை, அவர்கள் மீது நம்பிக்கையில்லாத காரணத்தினால்தான் இந்த பிரஜா சக்தியை கொண்டு வருகிறோம் என்ற ஒரு கருத்தை முன் வைத்தார்.

இதனால் சபையில் கடும் அமளி துமளி ஏற்பட்டது. அந்த உறுப்பினரின் கருத்திற்கு தவிசாளர் உட்பட ஏனைய உறுப்பினர்கள் தங்களுடைய வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தினார்கள்.

தவிசாளரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை 10 ஆதரவான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

# கண்ணப்பன் நிலையைக் கணக்கிடல் அரிது!

**இன்று கண்ணப்ப நாயனார் குருபூசைத் தினம். அதை ஒட்டி இந்தக் கவிதைப் படைப்பு பிரசுரமாகின்றது.**



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



சேக்கிழார் பெருமான் செப்பிய கதையில்
மாக்கதை யாக மனமதில் பதிவது
கண்ணினை அப்பிய கண்ணப்பன் கதையே
எண்ணிட எண்ணிட வியப்பாய் விரியுது

நடக்குமா என்று கேட்டிட வைக்கும்
நம்பவே இயலா கண்ணப்பன் கதையே
படித்திடும் தோறும் பதறுதே நெஞ்சம்
கண்ணைப் பிடுங்கிட எண்ணிய காரியம்

வெட்டுக் குத்து ரத்தம் இறைச்சி
பார்த்துப் பழகிய வேடுவர் வாழ்க்கை
அந்த வாழ்க்கையை பற்றியே வாழ்ந்தவன்
பக்தி வலைக்குள் புகுந்தது வியப்பே

கொல்வதும் தின்பதும் கொண்டாடிக் களிப்பதும்
நல்லது என்றுமே நாளுமே வாழ்ந்தவர்
வாழ்ந்தவர் மரபில் வந்தவன் கண்ணப்பன்
எப்படி மாறினான் என்பதே அதிசயம்

கற்றவன் அல்லன் தேர்ந்தவன் அல்லன்
அறமும் அறியான் அஹிம்சையும் அறியான்
ஆனால் அவனுள் ஏதோ இருந்தது
அதுவே அவனின் அன்பாய் மலர்ந்தது

கோவிலும் தெரியான் சாமியும் தெரியான்
சடங்கு மறியான் சாத்திர மறியான்
பக்தி ஊற்றுப் பீறிட்டு எழுந்தது
பரமனின் முன்னே தன்னையே மறந்தான்

சுவைத்துச் சுவைத்து இறைச்சியைப் படைத்தான்
வாயுடை நீரால் மஞ்சனம் செய்தான்
சூதும் அறியான் சூழ்ச்சியும் தெரியான்
தூய மனத்துடன் அனைத்துமே யாற்றினான்

கண்ணைப் பிடிங்கி அப்பினான் கண்ணப்பன்
எப்பிடிப் பிடிங்கினான் என்பதே கேள்வி
தன்னை மறந்து கண்ணப்பன் இருந்தான்
கண்ணைப் பிடிங்கினான் காணிக்கை ஆக்கினான்

இறைவனின் கண்களில் இரத்தங் கண்டான்
பதறித் துடித்தான் பரிகாரம் கண்டான்
கண்ணே மருந்து என்றே எண்ணினான்
எண்ணிய திண்ணன் பிடுங்கியே அப்பினான்

கண்ணப்பன் நிலையை கணக்கிடல் அரிது
அன்பின் வடிவமாய் ஆகினான் அவனும்
அன்பினில் அமிழ்ந்த கண்ணப்பன் செய்கை
ஆருமே நினைக்கா அரும்பெருஞ் செய்கை

அன்பின் முதிர்நிலை கண்ணப்பன் அடைந்தான்
அவனுக் கீடார் யாருமே இல்லை
அதனால் அவனை அணைத்தார் ஆண்டவன்
அன்பே சிவமாய் அமைந்ததன் விளைவே!

# இலங்கையின் சுதந்திர தினம் ஈழத் தமிழர்களுக்கு கரி நாளே

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி மட்டக்களப்பில் நேற்று காரணங்களோடு விளக்கம்







**(வாலகிருஸ்ணா)**

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் கூட கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. நீதி கிடைக்கப் பெறாத சமூகமாக மக்களாக 350 க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளைத் தேடி இப்போது உயிரிழந்து விட்டார்கள். இந்த சாட்சியங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றதன. இந்த நாட்டின் சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாளாகவே இருந்து வருகின்றது. இந்த நிலையில் அன்றைய தினம் அனைத்து தமிழர்களும் ஒன்று சேர்த்து எமது எதிர்ப்பைத் தெரிவிக்க முன்வரவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமலராஜ் அமலநாயகி வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக நேற்றைய தினம் இது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் என்பன இணைந்து இந்தக் கூட்டத்தை நடத்தின.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில்சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 04ஆம் திகதி மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பிலான ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அமலராஜ் அமலநாயகி கூறியவை வருமாறு:-

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்படுவது சுதந்திர நாள் என்று. ஆனால் அது தமிழர்களாகிய எங்களுக்கு ஒரு கரிநாள். எத்தனையோ ஆட்சிகள் மாறி வந்தாலும் தமிழர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. 90 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து தங்களது உறவுகளை தொலைத்து விட்டு மக்கள் தேடுகின்றனர். ஒவ்வொரு ஆட்சியாளர்களும் வந்து செல்வார்களே தவிர, தாய்மாருக்கான எந்த ஒரு நீதியும் இதுவரை கிடைக்கவில்லை.

16 வருடங்களாக எனது கணவரை கூட நான் தேடிக் கொண்டு இருக்கின்றேன். 16 வருடங்களாக ஒவ்வொரு ஆட்சியாளரும் வந்து அதனைச் செய்வோம், இதனைச் செய்வோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் இந்தக் காணாமல் ஆக்கப்பட்ட பிரச்சினைக் குறித்து இந்தப் புதிய அரசு கூட எந்த ஒரு விதத்திலும் கவனம் செலுத்தவில்லை. தற்போதைய ஜனாதிபதி தேர்தல் காலங்களில் பல்வேறு வாக்குறுதிகளை தெரிவித்து இந்த ஆட்சிக்கு வந்திருக்கின்றெ. சுமுகமான ஒரு அரசியலாக பார்க்கின்றாரே தவிர மற்றபடி எங்களுக்கான பிரச்சினைகளுக்கான எந்த ஒரு தீர்வு திட்டமும் இதுவரை இடம்பெறவில்லை.

அந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் கூட கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. நீதி கிடைக்கப் பெறாத சமூகமாக மக்களாக 350 க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளைத் தேடி இறந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்த சாட்சியங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

அதேபோன்று தமிழர்களது அனைத்து உரிமைகளும் முடக்கப்படுகின்றன. புதிய சட்டங்களை கொண்டு வந்து எங்களது குரலை நசுக்கிக்கின்றார்கள். தனது மண்ணில் தான் ஆளக்கூடிய நிலைமை இல்லாத ஒரு சூழ்நிலையை ஒவ்வொரு சிங்கள அரசியல் சட்டங்கள் ஊடாகவும் எங்களை ஓர் அடக்குமுறைக்குள் கொண்டு வருகின்றார்கள்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டம் தொடர்பாக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று அழைப்புகளை விடுத்து வருகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் அனைத்துப் பொதுமக்களும், சிவில் அமைப்புகளும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் உரத்த ஒரு குரல் கொடுத்து நான்காம் திகதி இந்த போராட்டத்திற்கு பெரிய ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும்.

இதுவரை இந்த அரசு ஒன்றரை வருடங்கள் கடந்து எங்களுக்கான நிலப் பிரச்சினைகளாக இருக்கட்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையாக இருக்கட்டும். எதற்கும் தீர்வு இல்லை. தொல்பொருள் என்கின்ற போர்வையில் பதாகைகளை இட்டு எங்கள் நிலங்களை அர. காணிகளாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய நிலத்தில் நாங்கள் வாழ்வதற்கான உரிமை இல்லை. எமது நிலத்தைத் தா என்று கேட்டாலும் அதற்கும் பொலிஸாரைக் குவித்து எங்களை அடக்கி ஒடுக்குகிறார்கள். தவிர இவ்வாறான நாட்டில் எமக்கு எங்கு சுதந்திரம்? இந்த சுதந்திரம் இல்லாததால்தான் நாங்கள் கரி நாளாக எதிர்வரும் நான்காம் திகதியன்று நாங்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம்.

போக்குவரத்து சபை, வர்த்தக சங்கம், ஓட்டோ சங்கம், மீனவர் சங்கங்கள் அனைவரும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி பெருமளவான செய்தி ஒன்றினை இலங்கை அரசுக்கும் அல்லது சர்வதேசத்திற்கும் சொல்ல வேண்டும்.

தமிழர்கள் காலாகாலமாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நீதி இன்றி வீதிகளில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். பிள்ளைகளைத் தொலைத்து விட்டு நீதி இல்லாமல் வயது முதிர்ந்த நிலையிலும் அவலத்தோடும் கண்ணீரோடும் ஏக்கத்தோடும் ஒவ்வொரு தாய்மாரும் மரணித்து கொண்டிருக்கின்றார்கள். இதே நிலை தொடராமல் எங்களுக்கு நீதி பெற்று தருவதற்கு அனைவரும் சேர்ந்து எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். – என்றார்.

# ஹட்டனில் அனுமதிப்பத்திரமின்றித் திறக்கப்பட்ட மீன் விற்பனை நிலையத்தினால் ஏற்பட்ட பதற்றம்!

## நகர சபை முதல்வருக்கும் உரிமையாளருக்கும் இடையில் வாக்குவாதம்








**(பொகவந்தலாவ: எஸ்.சதீஸ்)**

ஹட்டன் டிக்கோயா நகர சபையின் முறையான அனுமதிப்பத்திரமின்றி புதிய மீன் மற்றும் மளிகை விற்பனை நிலையமொன்றை திறக்க முயன்றமையால், நேற்றுக் காலை ஹட்டன் நகரில் அமைதியற்ற சூழல் நிலவியது.

இந்த விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நகரின் ஏனைய மீன் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் அங்கு ஒன்று திரண்டமையால் பதற்றம் ஏற்பட்டது.

இந்த விற்பனை நிலையத்திற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான பின்னணியில், நேற்றுக் காலை அந்த வர்த்தக நிலையம் திறக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட பதற்றத்தைக் கட்டுப்படுத்த ஹட்டன் பொலிஸார், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வருமான வரிப் பரிசோதகர்கள் தலையிட வேண்டியிருந்தது.

இப்பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்காகஉரிமையாளர்நகரசபைக்கு அழைக்கப்பட்ட போது, ஹட்டன் டிக்கோயா நகர சபை முதல்வர் அசோக கருணாரத்னவுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட முதல்வர் –

“தற்போதுள்ள சட்ட விதிகளின்படி இந்த இடத்தில் மீன் வியாபாரத்தில் ஈடுபட முடியாது. அடுத்த மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் நகரில் இயங்கும் அனைத்து மீன் விற்பனை நிலையங்கள் குறித்தும் சட்டபூர்வ தீர்மானம் எடுக்கப்படும். அதுவரை தன்னிச்சையான முறையில் வியாபாரம் செய்ய இடமளிக்க முடியாது.” – என்றார்.

மறுபுறம் வர்த்தக நிலைய உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில் –

தாம் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பல்பொருள் அங்காடியையே (Supermarket) நடத்துகிறார் எனவும், குளிரூட்டிகளைப் பயன்படுத்தி மிகவும் சுகாதாரமான முறையில் இறைச்சி மற்றும் மீன் வகைகளை விற்பனை செய்யத் தயாராக இருக்கின்றார் எனவும் கூறினார். தோட்டத் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் மீன் தயாரிப்புகளை வழங்குவதே தனது நோக்கம் எனவும், தேவையான அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் எதிர்காலத்தில் சட்டபூர்வமாகப் பெற்றுக்கொள்ளவுள்ளமையால், வியாபாரத்தைத் தொடர அனுமதிக்குமாறும் அவர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

விடயங்களை ஆராய்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வருமான வரிப் பரிசோதகர்கள், அடுத்த சபைக் கூட்டம் வரை மீன் விற்பனையை நிறுத்துமாறு உத்தரவிட்டனர். அதுவரை மளிகைப் பொருள்களை மாத்திரம் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, நகர சபைக்குச் சொந்தமான கடைகளை கடந்த மாதம் டெண்டர் (Tender) அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஏனைய வியாபாரிகள், இவ்வாறான சட்டவிரோத கடைகளுக்கு இடமளிப்பது தமக்கு இழைக்கப்படும் பெரும் அநீதி என விசனம் தெரிவித்துள்ளனர்.



# மன்னாரில் யுத்த காலப்பகுதியில் மூடப்பட்ட வீதி மன்னார் நகரசபை முயற்சியால் திறக்கப்படுகிறது

(மன்னார் நிருபர்)

மன்னார் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் நீண்ட காலமாக மூடப்பட்டு மக்கள் பாவையின்றி காணப்பட்ட வீதி மன்னார் நகர சபையால் செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளது.

1983-1984 ஆண்டு காலப்பகுதி வரை மக்கள் பயன்பாட்டில் இருந்த இந்த வீதி, நீண்ட காலமாக மக்கள் பயன்பாடு இன்றி மூடப்பட்டு காணப்பட்டது.

அது மூடப்பட்ட காலப்பகுதியில் இராணுவ சோதனை சாவடி உட்பட பல்வேறு இராணுவ சோதனை மற்றும் பாஸ் வழங்கும் அலுவலகங்கள் அப் பகுதியில் செயல்பட்டு வந்தன.

அதன் பின்னர் நீதிமன்ற கட்டு காவல் பொருள்கள் சேமிக்கப்பட்டு வந்ததோடு, பயன்படுத்த முடியாமல் காணப்பட்ட நிலையில், அந்த வீதி மற்றும் அதைச் சூழ உள்ள பகுதிகள் நகரசபையால் சுத்தம் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கிழக்கு ஆளுநர் தலைமையில் சுதந்திர தின நிகழ்வு கலந்தாய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

நாட்டின் 78 ஆவது தேசிய சுதந்திர தினத்துடன் இணைந்து மாகாண மட்டத்தில் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்காக, கிழக்கு மாகாண சுதந்திர தின விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நாமல் தலங்கம, திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யு.ஜீ.எம்.ஹேமந்த குமார, மாகாண அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், முப்படை பிரதிநிதிகள், பொலிஸ், விசேட அதிரடிப் படை, சிவில் பாதுகாப்புப் படை தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# யுவதி ஒருவர் கொடூரக் கொலை காதலன் தலைமறைவானார்!

24 வயதுடைய யுவதி ஒருவர், காதலன் என கூறப்படும் ஒருவரால் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று அங்குலான பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் வாதுவ, குடா வஸ்கடுவ, லிப்பன்ஸ் வட்டத்தைச் சேர்ந்த ஹேஷிலா கவிந்தி சில்வா என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையில், தலைமறைவான சந்தேகநபர், தனது மனைவியை பிரிந்து வசித்து வருகிறார் என்றும் யுவதியுடன் சுமார் எட்டு மாதங்களாக உறவில் இருந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

போதைப்பொருளுக்கு அதிக அடிமையான சந்தேகநபர், யுவதியை குறிவைத்து வந்து பழகி வந்துள்ளார். இதன் காரணமாக, யுவதின் பெற்றோர் அவரை வீட்டுக்கு அழைத்துச்செல்ல மறுத்துவிட்டனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரின் சகோதரர் அங்குலான பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வருவதுடன், அவரது தாய் அருகிலுள்ள மற்றொரு வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சந்தேகநபர் மற்றும் யுவதிக்கு அவரது தாயார் அல்லது சகோதரரின் வீட்டிலிருந்து உணவு வழங்கப்பட்டு வந்துள்ளது என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அந்த யுவதி கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# காத்தான்குடி அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.

(நூருல் ஹுதா உமர்)

காத்தான்குடி பிரதேசத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேரில் சென்று பார்வையிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வின் சிபாரிசின் பேரில், ஐ ரோட் வேலைத்திட்டத்தின் கீழ் காத்தான்குடிபிரதேசத்தில்மேற்கொள்ளப்பட்டுவரும் அல் அக்ஸா பள்ளிவாயல் வீதி அபிவிருத்தி மற்றும் பதுரியா பிரதேச வடிகாண் வேலைத்திட்டம் உள்ளிட்ட பணிகளையே அவர் இவ்வாறு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, குறித்த வேலைத்திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் உட்பட சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார்.

கலந்துரையாடலின் போது, பெப்ரவரி மாதத்துக்கு முன்பாக அனைத்து அபிவிருத்திப் பணிகளும் நிறைவடையும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். குறித்த திட்டத்தின் மிகுதி நிதி தொடர்பாகவும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

# மோட்டார் சைக்கிளுக்கு ஆசைப்பட்ட இளைஞன் பிறந்த நாளன்று மரணம்!

மோட்டார் சைக்கிள் மீது தீராத ஆர்வம் கொண்டிருந்த 18 வயதுடைய மாணவன் ஒருவர், தனது பிறந்தநாளைக் கொண்டாடிய அடுத்த நாளிலேயே விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பதுரலிய பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பதுரலிய, கம்புராவல பகுதியைச் சேர்ந்த ஹசிது தேமிய விஜேதுங்க என்ற இளைஞனே இவ்வாறு அகால மரணமடைந்துள்ளார்.

மதுகம சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்று வந்த அந்த மாணவன், அப்பகுதியின் வர்த்தக தம்பதிகளின் மூத்த மகனாவார்.

ஹசிது கல்வியில் மாத்திரமன்றி, விளையாட்டிலும் பாடசாலைப் புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் ஒரு சிறந்த வீரனாகத் திகழ்ந்துள்ளார்.

கராத்தே போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் வென்ற மாணவனாவார்.



பாடசாலை நீச்சல் போட்டிகளில் பலமுறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

பாடசாலை கெடட் (Cadet) குழுவில் இணைந்து, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தனது பாடசாலைக்கு 'ஹெர்மன் லூஸ்' (Herman Loose) எனும் கௌரவப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த குழுவில் முக்கிய வீரராக இருந்துள்ளார்.

மகனுக்கு மோட்டார் சைக்கிள் என்றால் மிகவும் பிடிக்கும். பழைய உந்துருளிகளை வாங்கி, சில நாள்கள் ஓட்டிவிட்டு, நண்பர்களுடன் புகைப்படம் எடுத்து மகிழ்வார். பின்னர் அவற்றை மீண்டும் விற்றுவிடுவார். எதிர்காலத்தில் வாகன வியாபாரி ஆக வேண்டும் என்பதே அவனது கனவாக இருந்தது என அவரது தாய் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி தனது 18 ஆவது பிறந்தநாளை ஹசிது கொண்டாடியுள்ளார்.

அதற்கு அடுத்த நாள் இரவு நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, பதுரலிய – களுக்கலை வீதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஹசிது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவர் விபத்துக்குள்ளான உந்துருளியை வாங்கி இரண்டு வாரங்கள் கூட நிறைவடையவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். திறமைமிக்க ஒரு மாணவனின் இந்த திடீர் மறைவு, பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.




# கிளிநொச்சியில் பஸ் – டிப்பர் விபத்தில் நான்கு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சியில் பஸ், டிப்பர் விபத்தில் நான்கு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்து சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரிவுக்கு உட்பட்ட ஏ-9 பிரதான வீதியில் விபத்து சம்பவத்துள்ளது.

யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த அரச பஸ், முறிகண்டி பகுதியில் இருந்து மணல் ஏற்றி யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்துடன் ஒன்றுடன் ஒன்று மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

டிப்பர் சாரதியின் நித்திரைக் கலக்கம் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ் சாரதி மற்றும் பயணிகள் இருவருடன் டிப்பர் சாரதி உட்பட நான்கு பேர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி காவல் துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வடமராட்சி கிழக்கு போக்குவரத்துப் பிரச்சினை ஆராய்ந்தனர் போக்குவரத்து சபை அதிகாரிகள்

(பூ.லின்ரன்)

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் அண்மைக் காலமாக பல போக்குவரத்து பிரச்சினைகள் இடம்பெற்றதுடன் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறுபட்ட முறைப்பாடுகள் வடமராட்சி கிழக்கு பொது அமைப்புக்களால் உரிய திணைக் களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனாலும் இப் பிரச்சினைகள் தொடர்பாக எந்த வித தீர்வும் கிடைக்காத நிலையில் இந்த மாதம் ஆரம்பத்தில் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு உரிய நேரத்துக்கு வருகை தருவது இல்லை, மருதங்கேணி வைத்திய சாலை அருகாமையில் அதிக நேரம் காத்திருந்து பயணிகளை ஏற்றிச் செல்லல், கேவில் வரை பஸ்கள் செல்வதில்லை, இலகுவாக பழுதடையும் பஸ்களை வடமராட்சி கிழக்கில் பணிக்கு அமர்த்துதல் என பல்வேறு பட்ட முறைப்பாடுகள் ஊடகங்களில் வருவதை தொடர்ந்து இந்தக் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பகுதிக்கு பஸ்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் மருதங்கேணி வைத்தியசாலை பகுதியில் மக்கள் கோரிக்கைக்கு இணங்கவே இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் அதிக நேரம் நிற்பதாகவும் அச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களில் வரும் கருத்துக்கள் போலியானது எனவும் அதிகாரிகளால் சுட்டி காட்டப் பட்டது. பஸ்களை போதியளவு சேவையில் ஈடுபடுத்தும்வரை அவ் இடத்தில் காத்திருந்து மக்களை ஏற்றி செல்வது அவசியமாக காணப்படுவதால் அவ்வாறே இடம்பெறுகிறது என்று தெரிவித்தனர்.

மற்றும் கேவில் வரை பஸ் செல்வது தொடர்பாக ஆய்வின் முடிவில், பஸ் சாரதி மற்றும் நடத்துனர் இரவு நேரங்களில் தங்கிசெல்வது தொடர்பாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். மற்றும் பஸ் நிறுத்தி வைப்பதில் பிரச்சினை காணப்படுகிறது. கடந்த காலத்தில் சில அசௌகரியங்கள் இடம்பற்றுள்ளன என்றும் இனிமேல் அவ்வாறு நடைபெறாது எனவும் தங்குமிட வசதிகள் தொடர்பாக கேவில் கிராம அபிவிருத்தி சங்கம் வசதிகளை ஏற்பாடு செய்து தந்துள்ளது என்றும் கூறியுள்ளனர்.

இனிமேல் வடமராட்சி கிழக்கு மக்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களால் சிரமப்படத் தேவையில்லை என்றும் அவ்வாறு எதாவது பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக அறிய தந்தால் நாம் அதற்கான தீர்வுகளை பெற்று தருவோம் என்றும் அவர்கள் கள விஜயத்தில் தெரிவித்தனர்.

இந்தக் கள விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் உதய பாஸ்கரனும் கலந்து கொண்டார்.

# இந்திய கடற்றொழிலாளர் அத்துமீறல் டிட்வா புயலுக்குப் பின்னர் அதிகரித்தது!

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் ஆலம் விசனம்

டிட்வா புயலுக்குப் பின்னர் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது என்று மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்திய கடற்றொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும் இலங்கை அரசின் செயற்பாடுகளில் தளர்வுப்போக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவதானிக்க முடிகிறது என்று மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவிக்கின்றார்.



மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

# பா.ஜ.கவிலிருந்து வெளியேற விரும்பினார்: அஜித் பவார் மரணம் பற்றி மம்தா சந்தேகம்

"பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அஜித் பவார் விலக உள்ளார் என இரண்டு நாள்களுக்கு முன்பு செய்தி வெளியானது. இந்நிலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இது குறித்து உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் விசாரணை நடத்தப்பட வேண்டும்."

– இவ்வாறு திரிணமூல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் தலைவரும் மகாராஷ்டிர துணை முதல்வருமான அஜித் பவார் நேற்று காலை 8.45 மணி அளவில் விமான விபத்தில் உயிரிழந்தார். சிறிய ரக விமானம் ஒன்றில் மும்பையில் இருந்து பாரமதி சென்ற போது விமானம் விபத்துக்குள்ளானது. அவருடன் சென்ற மேலும் 4 பேரும்



இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இந்த விபத்து குறித்து மம்தா பானர்ஜி சந்தேகத்தை எழுப்பி உள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி,

"எதிர்க்கட்சிகளின் நிலை என்னாகுமோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர் ஆளும் கட்சியுடன்தான் (பா.ஜ.க.) இருந்தார். ஆனால், அஜித் பவார் பாஜக அணியில் இருந்து விலகத் தயாராக உள்ளதாக இரண்டு நாள்களுக்கு முன்பு வேறொரு கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் அறிக்கை அளித்ததாக நான் அறிந்தேன். இந்நிலையில், இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் முறையான விசாணையை நான் கோருகிறேன். எங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் மீது மட்டுமே நம்பிக்கை உள்ளது. வேறு எந்த ஏஜென்சி மீதும் நம்பிக்கை இல்லை. அனைத்து ஏஜென்சிகளும் முழுமையாக சமரசம் செய்யப்பட்டுவிட்டன.

உண்மையில் இது ஒரு மிகப் பெரிய இழப்பு. இன்று அவர் பா,ஜ,க, அணியில் இருந்தார். ஆனால், நாளை அவர் தனது கட்சியின் உண்மையான இடத்துக்குத் திரும்புவார் என எதிர் பார்க்கப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.

# சட்டப்பேரவை தேர்தலில் நான் போட்டியிடவில்லை

## சரத்குமார் அறிவிப்பு



"வரும் சட்டப்பேரவை தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை, என்னை நம்பி வந்த 5 பேருக்கு சீட் வாங்கி கொடுப்பதே எனது எண்ணம்." என பா.ஜ.க. தேசிய பொதுக்குழு உறுப்பினரான நடிகர் சரத்குமார் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

"பா.ஜ.க கூட்டணியில் யார், யார் சேருகிறார்கள் என்பதை கட்சியின் மாநில தலைவர் அறிவிப்பார். பா.ஜ.க. கூட்டணி குறித்து குறை சொல்பவர்கள் சொல்லிக் கொண்டு தான் இருப்பார்கள். தேர்தல் களத்தில் மக்கள் வாக்களிக்கும் போது எந்தக் கூட்டணி வலுவான கூட்டணி என்பது தெரியும். விஜய் மட்டுமல்ல எல்லா கட்சிகளுமே ஊழலுக்கு எதிராக தான் பேசுகிறார்கள்.

அவர் ஒன்றும் புதிதாக சொல்லவில்லை. கூட்டணி ஆட்சியா அல்லது தனி கட்சி ஆட்சியா என்பது தேர்தல் முடிந்து ஆட்சி அமைக்கும் போது எங்கள் கட்சி மாநில தலைவர், அதிமுக பொதுச்செயலாளர் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் அமர்ந்து பேசி எடுக்க வேண்டிய முடிவு. அது பற்றி நான் கருத்து கூற முடியாது. வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கி தருவது தான் எங்களை போன்ற நிர்வாகிகளின் பொறுப்பு. தலைமை என்ன கூறுகிறதோ, அதற்கு கட்டுப்பட்டு செயல்படுவேன்.

இந்த தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை. என்னுடன் பயணிப்பவர்களுக்கு வாய்ப்பை வாங்கி தர வேண்டும் என்கிற எண்ணத்தில் இருக்கிறேன். இந்த கூட்டணி வெற்றி பெறுவதற்காக அயராது உழைக்க உறுதி எடுத்துக் கொண்டுள்ளேன். என்னுடன் பயணித்தவர்கள் பலர் இருக்கிறார்கள். கடின உழைப்பாளிகளான அவர்களுக்கு 5 இடங்களையாவது பெற்று தர வேண்டும் என நினைக்கிறேன். இது தொடர்பாக மாநில தலைவரிடம் பேசவுள்ளேன். நான் போட்டியிடாத போது ராதிகாவும் போட்டியிடமாட்டார்.

சிறுபான்மையினருக்கு பாதுகாவலர்கள் என கூறுபவர்கள் சிறுபான்மையினருக்கு என்ன செய்தார்கள் என்பதை ஒரு பட்டியல் போட்டு கொடுத்தால் நன்றாக இருக்கும். எந்த வகையில் அவர்களுக்கு துன்பம் வந்தது, எந்த வகையில் இவர்கள் பாதுகாவலர்களாக இருந்தார்கள் என்பதை தெளிவாக கூற வேண்டும். 30 ஆண்டுகளாக சிறுபான்மையினரின் பாதுகாவலர்கள் என கூறி வருபவர்கள் இதனை தெளிவுபடுத்த வேண்டும்.

மணிப்பூர் விவகாரத்தில் மத்திய அரசு மீது பொத்தாம் பொதுவாக குற்றம்சாட்டக்கூடாது. எல்லா இடங்களுக்கும் பிரதமர் போக வேண்டிய அவசியம் இல்லை. அவரது பிரதிநிதிகள் எல்லா இடங்களுக்கும் போய் பார்க்கிறார்கள்.

இதே கேள்வியை நடிகர் விஜய்யிடம் கேட்கலாமே. கரூர் சம்பவத்தில் இறந்த 41பேர் குடும்பத்தை பார்க்க முடியாமல் இருக்கிறார். அவரை முதலில் வீட்டை விட்டு வெளியே வந்து பேசச் சொல்லுங்கள். தவெகவுக்கும், திமுகவுக்கும் மட்டும் தான் போட்டி என எழுதி கொடுத்ததை விஜய் படித்துள்ளார். அதை தாண்டி அவருக்கு எதுவும் தெரியாது.

தி.மு.க, காங்கிரஸ் கூட்டணியில் நிலவும் பிரச்சினை குறித்து நான் கருத்து கூற முடியாது. நடிகர் விஜய் கட்சியை கலைப்பாரா என்பது போகப் போக தெரியும். நான் கட்சியை கலைத்ததற்கும், விஜய்யையும் சம்பத்படுத்த கூடாது. நான் 28 ஆண்டுகள் அரசியல் செய்தவன். 1996-ல் பிரச்சாரத்தை ஆரம்பித்தேன். பின்னர் கட்சி ஆரம்பித்து 17 ஆண்டுகள் நடத்தியுள்ளேன். நாடாளுமன்றம், சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்துள்ளேன். அரசியல் அனுபவம் பெற்றவன் நான். எனவே, விஜய்யை என்னுடன் ஒப்பிட முடியாது. கூட்டம் அனைவருக்கும் வரும். வடிவேலுக்கும் கூட்டம், நாளைக்கு அஜித் போனாலும், ரஜினி காந்த் போனாலும் கூட்டம் வரத்தான் செய்யும்.

கூட்டம் வரும், ஆனால் அவர்கள் வாக்களிப்பார்களா என்பது தேர்தலில் தான் தெரிய வரும். எதற்காக வாக்களிக்க போகிறோம், எந்தக் கொள்கைக்காக வாக்களிக்க போகிறோம், யார் வந்தால் சிறந்த ஆட்சியை கொடுக்க முடியும் என சிந்தித்து வாக்களிப்பவர்கள் மக்கள் தான். என்மீது மக்கள் நம்பிக்கை போனதால் நான் கட்சியை கலைக்கவில்லை. தேசிய நீரோட்டத்தில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைவரிடமும் கலந்து பேசி தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொண்டோம். "" என்று தெரிவித்தார்.

# குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே சரிவடையும் டொனால்ட் ட்ரம்ப் செல்வாக்கு!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் மற்றும் அவரது கொள்கைகள் குறித்து அந்நாட்டு மக்களிடையே நடத்தப்பட்ட புதிய கருத்துக்கணிப்பில், குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே அவரது செல்வாக்கு சரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் தேர்தல் வெற்றியில் முக்கிய பங்கு வகித்த குறைந்த வருமானம் பெறும் உழைக்கும் வர்க்க மக்களிடையே, தற்போது அவரது செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக தரவுகள் காட்டுகின்றன. பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகளே இதற்கு முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு மற்றும் வேலைவாய்ப்புச் சந்தையில் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக, குறைந்த வருமானம் பெறும் அமெரிக்கர்கள் ட்ரம்பின் நிர்வாகத்தின் மீது அதிருப்தியில் உள்ளமை தெரியவந்துள்ளது. தங்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்ற உணர்வு அவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

ட்ரம்பின் வரிச் சலுகைகள் மற்றும் ஏனைய பொருளாதாரத் திட்டங்கள் வசதி படைத்தவர்களுக்கும் பாரிய நிறுவனங்களுக்குமே அதிக நன்மையளிப்பதாக பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர். இது நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களிடையே ஒருவித ஏமாற்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்தச் செல்வாக்குச் சரிவு, வரவிருக்கும் தேர்தல்களில் குடியரசுக் கட்சிக்கு சவாலாக அமையலாம் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, ட்ரம்பின் "கோட்டை" எனக் கருதப்படும் பகுதிகளில் உள்ள வறிய மக்களின் ஆதரவு குறைவது அவரது அரசியல் எதிர்காலத்திற்குப் பாதகமாக அமையக்கூடும்.

இருப்பினும், ட்ரம்பின் தீவிர ஆதரவாளர்கள் இன்னமும் அவர் மீதும் அவரது "அமெரிக்காவை மீண்டும் முதன்மைப்படுத்துவோம்" என்ற கொள்கை மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் எல்லையில் வடகொரிய இராணுவம்

## போர் பதற்றம் அதிகரிப்பு



ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் பல வருடங்களாக நீடித்து வரும் நிலையில், தற்போது வடகொரிய இராணுவத்தினர் ரஷ்யாவுக்கு ஆதரவாக போர்க்களத்தில் குதித்துள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

சுமார் 10,000 இற்கும் மேற்பட்ட வடகொரிய இராணுவத்தினர் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்கள் உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் உளவுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது போரின் போக்கை மாற்றியமைக்கக் கூடிய ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சமீபகாலமாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் ஆகியோருக்கு இடையே ஏற்பட்டுள்ள நெருக்கமான பாதுகாப்பு உடன்படிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்த இராணுவ உதவி பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, நவீன ஏவுகணை தொழில்நுட்பங்களுக்குப் பதிலாக வடகொரியா தனது வீரர்களை ரஷ்யாவிற்கு வழங்க முன்வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும், இந்த மோதல் ஒரு "உலகப் போராக" மாறுவதற்கான அறிகுறி எனவும் அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் எச்சரித்துள்ளன. தென்கொரியாவும் இந்த விடயத்தில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதுடன், உக்ரைனுக்கு நேரடியாக ஆயுத உதவிகளை வழங்குவது குறித்து பரிசீலித்து வருகின்றது.

ஏற்கனவே ஆள் பற்றாக்குறையால் தவித்து வரும் ரஷ்ய இராணுவத்திற்கு வடகொரிய வீரர்களின் வருகை ஒரு புதிய பலத்தைத் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், மொழிக் குறைபாடுகள் மற்றும் நவீன போர் முறைகளில் வடகொரிய வீரர்களுக்கு உள்ள அனுபவமின்மை சவாலாக அமையலாம் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2025

### மேஷம்

இன்று செய்ய வேண்டிய காரியங்களை எதிர்கொள்வது கடினமாக இருக்கும். உங்கள் பொறுமையை இழக்க நேரிடலாம். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் உறுதியும் அவசியம்.

இன்று பணிகள் சுமுகமாக நடப்பதற்கு சாத்தியமான நாளாக அமையாது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணை உங்களை உதாசீனப்படுத்துவதன் காரணமாக உங்களுக்கு எரிச்சல் ஏற்படும். உங்கள் எரிச்சல் உணர்வுகளை அவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. அதனால் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் பயனுள்ள வகையில் அதை பயன்படுத்த முடியாது.

கண்கள் மற்றும் தொண்டை எரிச்சல்கள் போன்ற பாதிப்புகளுக்கு இன்று சிகிச்சை தேவைப்படலாம்.

### ரிஷபம்

உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.செயல்களில் தாமதம் நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையேயான குறைவான புரிந்துணர்வு காரணமாக அவரிடம் உங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

தேவையற்ற கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம். உங்களிடம் குறைந்த பணமே காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மனஅழுத்தம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். நீங்கள் மிகவும் சோர்வாகவும் அசௌகரியமாகவும் உணர்வீர்கள்.

### மிதுனம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது அவசியம் மற்றும் நல்லது.

உங்களிடம் காணப்படும் சிறப்பான திறமை காரணமாக உங்கள் பணிகளை நன்றாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்ல புரிந்துணர்வையும் அனுசரணையான அணுகுமுறையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படாது. செலவினங்களையும் எதிர்கொள்ள நேரலாம்.

இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

### கடகம்

உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக செயல்களை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை விரைந்து எடுப்பதற்கு உங்கள் மனமும் விரைவாகச் செயல்படும்.

இன்று சிறந்த வெற்றி கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பதவி உயர்வு என்ற பெயரில் அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனது உணர்ச்சிக்கு ஆட்பட்ட நிலையில் இருக்கும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அது உங்கள் உறவை வளர்க்க உதவும்.

இன்று வளர்ச்சி காணப்படும். வசதியுடன் இருப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

### சிம்மம்

உங்கள் அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழலில் சில ஏமாற்றங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு குறைந்து காணப்படும். அதனால் பணி வளர்ச்சி பாதிக்கப்படும்.

நீங்கள் இன்று மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடத்தில் அந்த உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் அவருடன் உங்களுக்கு நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகளும் பொறுப்புகளும் அதிகரிக்கும் காரணத்தால் இன்று கணிசமான தொகை சேமிக்க இயலாது.

நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.

### கன்னி

ஆன்மீகச் செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சி காணலாம். முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கு தேவையான முக்கியமான விஷயங்களில் ஒன்று கடவுள் வழிபாடு.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று உங்கள் துணையுடன் ஒரு இணக்கமான உறவை பராமரிக்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரலாம்.

குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

ஒவ்வாமை காரணமாக சளி சம்பந்தமான பிரச்சனைகளால் பாதிக்கப்படுவீர்கள்.

### துலாம்

நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். நேர்மறையான அணுகுமுறை அவசியம். தியானம் மற்றும் பிரார்த்தனை உங்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இன்று முடிக்க வேண்டிய பணியில் உங்கள் சக பணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். அதனால் பணிகள் நிலுவையில் இருக்கும். சகபணியாளர்கள் உங்களை நிந்திப்பார்கள்.

உங்கள் துணையுடன் கவனமாக பழக வேண்டும். உங்கள் இருவருக்கும் இடையே தொடர்பாடலில் சில குறைபாடுகள் காணப்படும்.

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக அமையாது. பண இழப்புகள் காரணமாக உங்கள் கையிருப்பு கரையும் வாய்ப்பு காணப்படுகின்றது.

காதுவலி ஏற்படலாம். உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.

### விருச்சிகம்

இன்றைய நாள் சமநிலையுடன் காணப்படும். நீங்கள் நினைத்ததை அடைவதற்கு குறைந்த அளவு முயற்சியே போதுமானதாக இருக்கும். உங்களுடைய இலக்குகளும் இலட்சியங்களும் சற்று இலகுவாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணியாற்றும் விதத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று மிகவும் கலகலப்பாக காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டத்தின் சாயல் காணப்படும். அதன் காரணமாக கணிசமான தொகையை தக்க வைத்துக் கொள்ள வழி கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2025




இன்றைய நாள் அபாரமான நாளாக இருக்கும். உங்கள் தொடர்பாடல் திறமை மூலமாக உங்கள் பிரியமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும் திறம்பட செயலாற்ற கால அட்டவணையை பின்பற்ற வேண்டும்.

இன்று மாலை உங்கள் துணையை சந்திப்பீர்கள். இது உங்கள் இருவருக்கும் ஒரு நல்ல சந்திப்பாக அமையும். மகிழ்ச்சி தரும் வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். நிதிநிலையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் காணப்படாது. ஆடை ஆபரணம், ஆடம்பரப் பொருள்கள் போன்ற பயனுள்ள விடயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




எதிர்மறை எண்ணங்கள் தோன்றலாம். அதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் வெற்றி காண்பது கடினம்.

பணியில் அதிக பொறுப்புகளை சுமக்க நேரிடும் பணியில் கவனம் செலுத்த வேண்டும். உங்களின் மேலான கவனம் பணியில் முன்னேறிச்செல்ல வழிகாட்டும்.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் காணப்படுவீர்கள். அதனை உங்கள் அணுகுமுறையிலும் வெளிப்படுத்துவீர்கள். அதனால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படலாம்.

பணவளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும். பணஇழப்புகள் ஏற்படலாம்.

தொண்டையில் தொற்று ஏற்படலாம். வெந்நீர் குடிப்பதன் மூலம் உபாதைகள் குறையலாம்.




எதையோ இழந்தது போன்று உணர்வீர்கள். சோர்வுடன் காணப்படுவீர்கள். அதனை தவிர்த்து சுறுசுறுப்புடனும் நேர்மறை எண்ணத்துடனும் இருக்க முயலுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் உங்களின் வேலையின் தரம் குறைந்து காணப்படுவதன் காரணமாக உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளின் கேள்விக்கு ஆளாகும்.

உங்கள் துணையுடன் பேசும்பொழுது கோபமான உணர்ச்சி காணப்படும். நல்லுறவை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்து எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளப் பழகுங்கள்.

கூடுதல் சுமைகள் காரணமாக இன்று பணத்தை அதிக அளவில் செலவு செய்ய நேரிடும்.

உங்கள் மனதில் தோன்றும் அமைதியற்ற உணர்வுகளின் காரணமாய் அசெகரியங்களை உணர்வீர்கள்.




இன்றைய நாள் துடிப்புடன் காணப்படும். வெற்றிக்கான முயற்சி செய்வீர்கள். திடமான சிந்தனையும் செயலாக்கமும் காணப்படும். வெற்றிக்கான உங்கள் முயற்சி ஜெயிக்கும்.

உங்கள் பணியில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது.எனவே பணியில் கவனமாக இருப்பது நல்லது.

உங்கள் துணையுடன் தார்மீக நெறிமுறைகளை கையாள்வீர்கள். இதனால் அவரை நீங்கள் நன்றாக புரிந்துகொள்வீர்கள்.

உங்களிடமுள்ள பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள். நல்ல முதலீட்டு ஆலோசனைகளில் பங்குபெறுவீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் இலேசாக எடுத்துக் கொள்வீர்கள்.

# மன்னார் முதல் தனங்கிளப்பு வரையான பயணத்தின் போது கைபேசியில் உரையாடியபடி பஸ்ஸைச் செலுத்திய சாரதி!

## அவருக்கு எதிராக போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

பயணிகள் போக்குவரத்து சேவை விதிமுறைகளை மீறி, கைப்பேசியைப் பயன்படுத்தியவாறு பஸ்ஸைச் செலுத்திய தனியார் பஸ் சாரதி ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அதேசமயம் பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் சென்ற மற்றொரு பஸ் சாரதி மற்றும் நடத்துநருக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த 25.01.2026 அன்று காலை 9.45 மணி அளவில் மன்னாரில் இருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸின் சாரதி, தனங்கிளப்பு வரையிலான பயணத்தின்போது, வீதிப் பாதுகாப்பு மற்றும் சேவை விதிமுறைகளை மீறி, கைப்பேசியில் உரையாடியவாறு பஸ்ஸைச் செலுத்தியமை தொடர்பில் காணொளி ஆதாரங்களுடன் முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இம் முறைப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் அடிப்படையில், அந்த பஸ் சாரதி மறு அறிவித்தல் வரும் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, கடந்த 23.01.2026 அன்று மதியம் 1.40 மணி அளவில், மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை ஏற்றாமல் சென்ற தனியார் பஸ் தொடர்பாக, பாடசாலை நிர்வாகத்தால் அதிகார சபைக்கு எழுத்து மூலம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக, தொடர்புடைய பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு உத்தியோகபூர்வமான கடும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இவ்வாறான விதி மீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக தயங்காமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – எனவும் அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.